பக்கங்கள் ஆறு

Registered as a Newspaper

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
இல்லார் இரு நூலகம்.

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 11 வள்ளுவர் ஆண்டு 2027 கார்த்திகை 03 திங்கட்கிழமை (18-11-1996) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 275

# வவுனியா வந்த அகதிகள் திரும்பி செல்வதில் முனைப்பு!

## பாதுகாப்புக் கெடுபிடி காரணமாம்

கொழும்பு, நவம்பர் 18

இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இல்லாத வன்னிப் பகுதியில் இருந்து வவுனியாவுக்கு வந்து அங்குள்ள அகதி முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிருப்போரில் கணிசமான எண்ணிக்கையினர் மீண்டும் தாண்டிக்குளம் ஊடாக இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத வன்னிப் பகுதிக்குள் திரும்பிச்செல்ல முனைப்புக் காட்டுவதாகக் கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

வவுனியாவில் சுதந்திரமாக நடமாடுவதற்கு தடை விதிக்கப்பட்டு முகாம்களில் அடைத்து வைக்கப்பட்டிருப்பதும்—

அந்த முகாம்களில் அடிப்படை வசதிகள் மிகக் குறைவாக இருப்பதுமே அவர்கள் திரும்பிச் செல்ல விரும்புவதற்கு முக்கிய காரணம் என்று கூறப்படுகின்றது.

இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத பகுதிகளில் இருந்து வவுனியாவுக்கு அண்மையில் வந்துசேர்ந்த சுமார் 14 ஆயிரம் பேரில் 750 பேர் இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத பகுதிகளுக்கு ஏற்கனவே திரும்பிச் சென்று விட்டதாகக் கூறப்படுகின்றது.

## ஜனாதிபதியுடன் தொண்டா நாளை மறுதினம் பேச்சு

இந்தியாவுக்குத் திரும்ப மறுத்து நாடற்றவர்கள் என்ற நிலையில் மலையகத்தில் வாழும் சுமார் ஒரு லட்சத்து அறுபதாயிரம் இந்தியத் தமிழ் தோட்டத் தொழிலாளர்களின் எதிர்காலம் குறித்து அமைச்சர் எஸ். தொண்டமான் நாளை மறுதினம் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவுடன் விரிவாகப் பேச்சு நடத்த விருப்பதாகத் தெரிய வருகின்றது.

சிறிமா — சாஸ்திரி ஒப்பந்தத்தின் கீழ் இந்தியா திரும்ப முடியாத நிலையில் உள்ள தொழிலாளர்களின் பிள்ளைகள், பேரப்பிள்ளைகள் குறித்தும் தொண்டமான் ஜனாதிபதியுடன் விவாதிப்பார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (இ-150)

## தாதியர் வேலை நிறுத்தம்

நாடெங்கும் உள்ள ஆஸ்பத்திரிகளில் பணியாற்றும் தாதியர்கள் எதிர்வரும் 22ஆம்திகதி வெள்ளிக்கிழமை முதல் வேலை நிறுத்தத்தில் இறங்கப் போவதாக அறிவித்துள்ளனர்.

சம்பள உயர்வு உட்பட பல கோரிக்கைகளை முன்வைத்து இப்போராட்டத்தில் அவர்கள் குதிக்கவுள்ளனர்.

வடபகுதி தவிர்ந்த ஏனைய பகுதிகளில் இந்த வேலை நிறுத்தம் இடம்பெறும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

## இராணுவ தளபதிக்கு விருது

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நேற்று மாலை ஜனாதிபதி மாளிகையில் இடம்பெற்ற வைபவம் ஒன்றில் இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் றொகான் தலுவத்தைக்கு 'விசிட்ட சேவா விபூஷண'' விருதை வழங்கினார்.

## டக்ளஸுக்கு அமைச்சர்பதவி இழுபறி நிலை தொடர்கிறது

கொழும்பு, நவ. 18

ஈ.பி.டி.பி. தலைவரும், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தாவுக்கு அமைச்சர் பதவி வழங்கும் அரசின் இரண்டாவது முயற்சியும் தோல்வியில் முடிந்துள்ளதாக ''சண்டே ரைம்ஸ்'' நேற்று செய்தி வெளியிட்டது.

வடக்கு —கிழக்கு நிர்வாகத்துக்கு பொறுப்பான அமைச்சைத் தருமாறு டக்ளஸ்தேவானந்தா அரசிடம் கோரியிருந்தார். ஆனால் அரசு அதனை விட வேறு அமைச்சைவழங்க முன் வந்ததாகவும் இதனால் இது விடயத்தில்இழுபறிநிலை தோன்றியுள்ளதாகவும்சொல்லப்படுகிறது.

கல்வி, உயர்கல்வி அமைச்சர் ரிச்சர்ட் பத்திரனவும், ஜனாதிபதியின் செயலாளர் குசும் பாலபட்டபெண்டியும் டக்ளஸுடன் பேச்சுநடத்தியதாகவும் —

அரசாங்கம் வழங்க விரும்பும் அமைச்சை டக்ளஸ் ஏற்க மறுத்து விட்டதாகவும் —அச்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பு நகருக்குள் கரும்புலிகள் ஊடுருவல்?

### படையினர் அதி உஷார் நிலையில்!

கொழும்பு, நவ. 18

விடுதலைப் புலிகளின் கரும்புலித் தாக்குதல் படைப் பிரிவைச் சேர்ந்தோர் கொழும்பு நகருக்குள் ஊடுருவியுள்ளதாகவும் —

எனவே இது குறித்துப் பொதுமக்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் எனவும் —

பாதுகாப்பு அதிகாரிகள் அறிவித்திருப்பதாக செய்தி ஏஜென்ஸி ஒன்று நேற்றுக் குறிப்பிட்டது.

விடுதலைப் புலிகளின் மாவீரர் நினைவு வாரம் இம்மாத இறுதியில் அனுஷ்டிக்கப்படுவதை ஒட்டி விரைவுபடுத்தப்பட்ட புலிகளின் தாக்குதல்களை இராணுவம் எதிர்பார்ப்பதாகத் தெரிகிறது.

எனவே இராணுவத்தினர்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## கல்லடிப் பாலம் அருகே சக்திமிக்க குண்டு மீட்பு!

மட்டக்களப்பு கல்லடிப் பாலத்துக்கு அருகில் கண்டெடுக்கப்பட்ட சக்திவாய்ந்த குண்டு ஒன்றை பொலீஸார் செயல் இழக்கச் செய்தனர் என்று இலங்கை வானொலி அறிவித்தது.

குறித்த நேரத்தில் வெடிக்கக் கூடிய இந்தக் குண்டு மட்டக்களப்பு காத்தான்குடி வீதியில் கல்லடி பொலீஸ் காவல் நிலையத்துக்கு அருகில் கண்டெடுக்கப்பட்டது.

சுமார் ஒரு கிலோ கிராம் எடையுள்ள சக்தி வாய்ந்த ரி. என் ரி. வெடிபொருளைப் பயன்படுத்தி இக்குண்டு தயாரிக்கப்பட்டிருந்தது.

காலை 9.45 மணியளவில் வெடிக்கக் கூடியதாக இக்குண்டு வைக்கப்பட்டிருந்தது என்றும் பொலீஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

பெரும் எண்ணிக்கையான சிரேஷ்ட பொலீஸ் அதிகாரிகள் மற்றும் ஆயுதப்படை அதிகாரிகள் இந்த வீதியால் பயணம் செய்வது வழமை என்று பொலீஸார் தெரிவித்தனர். (உ-3)

## ஊரடங்கு நேரம்

யாழ். குடாநாட்டில் தினமும் இரவு 8 மணி முதல் மறுநாள் காலை 5 30 மணி வரை ஊரடங்குச் சட்டம் நடைமுறைப்படுத்தப் படுவதாக பலாலி வானொலி நேற்று அறிவித்தது.

ஞாயிற்றுக்கிழமை விடுமுறை தினமான நேற்று குடாநாட்டில் பல பகுதிகளிலும் சுற்றிவளைப்பும் தேடுதலும் இடம்பெற்றன. இதனால் பல இடங்களில் வழமை நிலை பாதிக்கப்பட்டது.

## விஜேபால மெண்டிஸின் மகன் நேற்று தற்கொலை!

கொழும்பு, நவ. 18

முன்னாள் ஐ.தே.க. அமைச்சர் விஜேபால மெண்டிஸின் மகனும் மேல்மாகாண சபையின் ஐ.தே.க. உறுப்பினருமான தவிந்திர விஜே மெண்டிஸ் நேற்று மாலை தமது நீர்கொழும்பு இல்லத்தில் அதிகாலை தூக்க மாத்திரையை உட்கொண்டு தற்கொலை செய்து கொண்டார் என அறிவிக்கப்படுகின்றது.

நீர்கொழும்பு செல். மேரிஸ் தேவாலயத்தில் கடந்த ஓகஸ்ட் 31 ஆம்திகதி நடைபெறவிருந்த — ஐ.தே.கவின் 50 ஆண்டு நிறைவை ஒட்டிய— மத நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளின் போது அப்பகுதியில் இடம்பெற்ற மோதல் சம்பவம் ஒன்றில் இருவர் கொலையுண்டனர்.

அந்தஇரட்டைக் கொலைச் சம்பவம் தொடர்பான வழக்கில் முதல் எதிரியாகக் குற்றம் சாட்டப்பட்டிருந்த தவிந்திர விஜே மெண்டிஸ் கடந்த 11 ஆம் திகதியே விளக்கமறியலில் இருந்து பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தார்.

## சங்கரத்தையில் ஆயுதங்கள் மீட்பு!

சங்கரத்தையிலும் கொக்குவிலிலும் நேற்று முன்தினம் படையினர் நடத்திய தேடுதலில் ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டதாகக் கொழும்பில் அறிவிக்கப்பட்டது.

சங்கரத்தையில் தொடர்பு சாதனப்பெட்டி -- ஒன்று, கைக்குண்டுகள்— ஏழு, குண்டுகள் — இரண்டு மற்றும் அன்ரனாக்கள், வெடிமருந்துகள், மருந்துப் பொருள்கள் ஆகியவையும்—

கொக்குவிலில் ரி - 56 ரகத் துப்பாக்கி மற்றும் ரவைகள் ஆகியவையும் |

படையினரால் கைப்பற்றப் [illegible] (உ-3)

## வெலிக்கடைச் சிறையில் 35 தமிழ்ப் பெண்கள்

கொழும்பு, நவ. 18

அவசரகாலச் சட்ட விதிகளின் கீழ் கைது செய்யப்பட்ட வடக்கு - கிழக்கு மற்றும் மலையகப் பகுதிகளைச் சேர்ந்த 35 தமிழ்ப் பெண்கள் வெலிக்கடைச் சிறைச்சாலையில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர் என்று தெரியவருகிறது.

இவர்கள் சம்பந்தமான விசாரணைகளை துரிதமாக மேற்கொள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

தடுப்புக் காவல் உத்தரவின் பேரில் ஆறு பெண்கள் இங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

காங்கேசன்துறை கப்பல் தாக்குதலின்போது கடலில் கைதான இரு பெண் புலிகளும் இவர்களில் அடங்குவர்.

புலி உறுப்பினர் என்ற சந்தேகத்தின் பேரில் [illegible]

(6 ஆம் பக்கம் பார்க்க)

## உதவும் நாடுகள் கூட்டத்தில் உரிய உதவி கிடைக்குமா?

### நிலைமை சாதகமாக இல்லையாம்!

கொழும்பு, நவ. 18

அபிவிருத்தி அடைந்த நாடுகள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகள் காரணமாக, இலங்கைக்கு பெருமளவில் வெளிநாட்டு நிதி உதவிகள் கிடைப்பதற்கான சர்வதேச சூழ்நிலை சாதகமாக இல்லை என்று பிரதி நிதி அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் தெரிவித்தார்.

எனினும் இலங்கையில் நடைபெறும் யுத்தத்தைக் காட்டி, அதனால் உண்டாகும் இழப்புக்களை விசேடமாக எடுத்துச் சொல்லி மறுசீரமைப்புக்கு உதவி கோர வசதி உண்டு என்றும் அவர் சொன்னார்.

(6 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈட்டு உறுதியை இரத்துச் செய்ய

## வீடமைப்பு திணைக்கள யாழ். கிளைக்கு அதிகாரம்

யாழ்ப்பாணம், நவ. 18

தேசிய வீடமைப்புத் திணைக் களசத்தின் யாழ். அலுவல கத்தால் வழங்கப்பட்ட சகல கடன்களுக்குமான ஈட்டுறுதி களை இரத்துச் செய்யும் அதிகாரம் தற்போது யாழ். அலுவல முகாமையாளருக்கு வழங்கப்பட்டுள்ளது.

20 ஆயிரம் ரூபாவுக்கு மேல் கடன் பெற்றவர்களின் ஈட்டு உறுதியும், சம்பளப்பட்டியலில் இருந்து அறவிடப்படுவர்களின் ஈட்டு றுதியும் இதுவரை கொழும்பு தலைமையகத்தா லேயே இரத்துச் செய்யப்பட்டு வந்தது.

புதிய ஏற்பாட்டின்படி கடனை மீளச் செலுத்து வோர் தமது ஈட்டுறுதியை இங்கேயே உடன்பெற முடியும் என்றும்—

ஏற்கனவே பணத்தைச் செலுத்தி இதுவரை ஈட்டுறு தியை பெறாதவர்கள் விவ ரங்களை யாழ். அலுவலகத் துக்கு தெரியப்படுத்தினால் விரைவாக ஈட்டுறுதி கிடைக்க உதவமுடியும் என்றும் –

மாவட்ட முகாமையாளர் திரு. சு. மாசிலாமணி தெரி வித்துள்ளார், (உ-3)

# தீர்வுத்திட்டத்தை ஐ. தே. க. ஏற்றால் ஜனாதிபதி ஆட்சி முறை நீக்கப்படும்

### நாடாளுமன்றில் அஷ்ரப் உத்தரவாதம்

கொழும்பு, நவ. 17

"இனப்பிரச்சினைக்கு தீர்வு காண அரசாங்கம் முன்வைத் துள்ள யோசனைகளுக்கு ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவு வழங்கினால் நாளையே நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்."

இப்படி ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், துறை முகங்கள், கப்பல் துறை, புனர்வாழவு புனரமைப்பு அமைச்சருமான எம். எச். எம். அஷ்ரப் நேற்று முன் தினம் நாடாளுமன்றத்தில் வரவு செலவுத் திட்ட நிதி ஒதுக்கீடு விவாதத்தில் கலந்து கொண்டு பேசுகையில் கூறி னார்.

ஐ. தே. கட்சியினர் அரசி யல் தீர்வு யோசனைகளுக்கு ஆதரவு வழங்கினால், நிறை வேற்று ஜனாதிபதி ஆட்சி முறையை நீக்கி நாடாளு மன்றத்தைக் கலைத்து விடு மாறும் நாம் ஜனாதிபதியிடம் கூறுவோம் என்றும் அவர் கூறி னார். (இ-4)

## போலி ஆவண அலுவலகம் கொழும்பில் முற்றுகை

கொழும்பு, நவ. 18

கொழும்பு, புறக்கோட்டை மலிபன் வீதியில் உள்ள அலு வலக மொன்றினை முற்று கையிட்ட பொலீஸார் போலி ஆவணங்கள் பலவற்றை அங் கிருந்து கைப்பற்றினர்.

சிரேஷ்ட இராணுவ அதிகா ரிகள், அரசாங்க அதிகாரிகள், அரசாங்க அதிபர்கள், கிராம அதிகாரிகள் ஆகியோரின் பெயர்களுடனான றப்பர் ஸ்டாம்புகள், வெற்றுக்கல்விச் சான்றிதழ்கள், வெளிநாட்டு விஸா படிவங்கள் என்பவற் றையும் அங்கிருந்து பொலீ ஸார் கைப்பற்றினர்.

அந்த அலுவலகத்தில் இருந்த— அப்பு என்றழைக் கப்படுல்— சதாசிவம் இரா மையா என்பவரைப் பொலீ ஸார் கைது செய்துள்ளனர்.

முஸ்லிமைப் போல பழகிய தாகக் கூறப்படும் இவர் தற் போது பொலீஸ் காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

பட்டலந்த ஆணைக்குழு முன்

## சாட்சியமளிக்க வருமாறு ரணிலுக்கு அழைப்பு வரும்

கொழும்பு, நவ. 18

பட்டலந்த பகுதியில் இயங் கியதாகக் கூறப்படும் சித்திர வதை முகாம் குறித்து விசா ரணை நடத்தி வரும் ஜனாதி பதி ஆணைக் குழு முன் சாட் சியமளிக்க வரும்படி எதிர்க் கட்சித் தலைவரும் ஐ.தே.க. தலைவருமான ரணில் விக் கிரமசிங்காவுக்கு ஆணைக் குழு நோட்டீஸ் அனுப்ப விருக்கிறது.

கொழும்புப் பத்திரிகை ஒன்று இத்தகவலை வெளி யிட்டுள்ளது.

ஆணைக்குழுவுக்கு உதவி வரும் பொலீஸ் அதிகாரிகள் இந்த விவகாரம் குறித்து ரணில் விக்கிரமசிங்காவின் வாக்கு மூலத்தை பதிவு செய்திருந்தனர் என்பது தெரிந்ததே.

ரணிலின் சொந்தத் தொகு தியான பியகமவிலேயே பட் டலந்த பகுதி உள்ளது.

கடந்த ஆட்சிக் காலத்தில் சில பொலீஸ் அதிகாரிகளின் உதவியுடன் அங்கு சித்திர வதை முகாம் ஒன்று இயங்கி வந்ததாகக் கூறப்படுகின்றது.

## சோனியாவுக்கு காங். தலைவர் அழைப்பு

புதுடில்லி, நவ. 18

காங்கிரஸ் கட்சியின் செயற் குழுவின் உறுப்பினராகும்படி முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியின் மனைவி சோனியா காந்திக்கு காங் கிரஸ் கட்சியின் தற்காலிகத் தலைவர் சீதாராம கேசரி அழைப்பு விடுத்துள்ளார்.

கட்சிக்குள் பெரும்பாலா னோர் இதை ஆதரித்தாலும் நரசிம்மராவின் ஆதரவாளர் கள் இது குறித்து மிகுந்த அதிருப்தியடைந்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. [இ-10]

## கண்ணிகளை பயன்படுத்துவது தடுக்கப்படும்

நியூயோர்க், நவ. 18

மனித உயிர்களுக்கு ஆபத்தை விளைவிக்கும் கண்ணி வெடிகளைத் தயா ரிப்பது, கண்ணிவெடிகளை வேறு இடங்களுக்கு எடுத்துச் செல்வது, அவற்றைப் பயன் படுத்துவது மற்றும் சேமிப் பது சர்வதேச அளவில் தடைசெய்யப்பட வேண் டும் என ஐ நா. சபையில் கோரிக்கை விடப்பட்டுள்ளது.

141 நாடுகளின் ஆதரவைப் பெற்றுள்ள இந்தப் பரிந் துரை விரைவில் ஐ. நா. பொதுச்சபையால் ஏற்றுக் கொள்ளப்படும் என எதிர் பார்க்கப்படுகிறது.

இன்று உலகில் 70 நாடு களில் 11 கோடி நிலக் கண்ணி வெடிகள் புதைக்கப்பட்டுள் ளன. (இ-10)

## ஈ.பி.டி.பியின் எம். பிக்களுக்கும் அழைப்பு

கொழும்பு, நவ. 18

யாழ்ப்பாணத்தில் மனித உரிமைகள் செயலணிக் குழு வின் கிளை ஒன்றை அமைப் பது தொடர்பாக கொழும் பில் இன்று நடைபெறும் அவசர மாநாட்டுக்கு ஈ.பி. டி.பியின் எம்பிக்களும் அழைக் கப்பட்டுள்ளனர்.

ஈ பி.டி.பியின் எம் பிக்க ளான எஸ் சிவதாசன், என். சந்திரகுமார் ஆகியோர் இந்த மாநாட்டுக்கு அழைக் கப்பட்டுள்ளதாக அறிவிக்கப் படுகிறது.

பிரதி அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே, நீலன் திருச்செல்வம், மஹிந்த சமரசிங்க ஆகியோருக்கு ஏற் கனவே அழைப்பு அனுப்பப் பட்டுள்ளதாக [illegible] உரிமைகள் செயலணிக் குழுத் தலைவர் ஜான்ஸ் தெரிவித் தார். (உ-3)

## பொலீஸாருக்கு இனிமேல் நீலச் சீருடை

பொலீஸாருக்கு காக்கி நிறச் சீருடைகளுக்குப் பதிலாக இனிமேல் நீல நிறச் சீருடை களை பொலீஸ் திணைக் களம் வழங்கவிருக்கிறது.

ஆரம்ப காலத்தில் கட்டைக் காற்சட்டையும், நீண்ட கை யுடைய சேர்ட்டுமாக இருந்த பொலீஸாரின் சீருடை தற் போதைய நிலைக்கு கொண்டு வரப்பட்டது.

இனிமேல் இளம் நீலநிற சேர்ட்டும், கடும் நீலநிற காற் சட்டையும் பொலீஸாருக்கு வழங்கப்படவுள்ளது. (உ-8)

---

# மரண அறிவித்தல்கள்

## திருமதி மார்க்கண்டு சரஸ்வதி

மாவிட்டபுரம் மடத்தடியைப் பிறப்பிடமாகக் கொண்ட மார்க்கண்டு சரஸ்வதி 12-11-1996 இல் நெடுங்கேணியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மார்க்கண்டுவின் மனைவி யும், காலஞ்சென்ற தங்கச்சியம்மா, காலஞ்சென்ற முரு கையா, சின்னம்மா ஆகியோரின் சகோதரியும் பரா சக்தி, பாலசுப்பிரமணியம் (டோகா), கமலாதேவி, விக்கினேஸ்வரன் (டோகா) ஆகியோரின் அன்புத் தாயாரும், சண்முகநாதன், உதயநிர்மலா ஆகியோ ரின் மாமியாரும், கயேந்திரன், ஜெயேந்திரன், நிவாசினி ஆகியோரின் ஆன்புப் பேர்த்தியுமாவர்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நெடுங்கேணியில் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர் கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்;

தகவல்:
வே. சிதம்பரநாதன் (பெறாமகன்)
பாலசுப்பிரமணியம்
உதயநிர்மலா (பாப்பா)
(மருமகள்)

அம்மன் வீதி,
திருநெல்வேலி.

(43691)

## திருமதி கோவிந்தராஜா தயாரூபி

(ஆசிரியை, யா/ சரசாலை விக்கினேஸ்வரா வித்தியாலயம்)

சாவகச்சேரியைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி கோவிந்தராஜா தயாரூபி 16 - 11 - 96 இல் காலமானார்.

அன்னார் கோவிந்தராஜாவின் (துணை அதிபர், சரசாலை விக்கினேஸ்வரா வித்தியாலயம்) அன்பு மனைவியும், காலஞ்சென்ற ச. கதிரவேலு (முன்னாள் சுகாதாரப் பரிசோதகர்) – க. நாகபூஷணம் ஆகியோ ரின் அன்பு மகளும், தயாபரன் (தொழில் நுட்பவிய லாளர், கொழும்பு), ராஜீவி (மக்கள் வங்கி, சாவகச் சேரி) ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்ற த. கந்தசாமி – திருமதி க. தங்கம்மா ஆகியோரின் அன்பு மருமகளும், திருமதி சாரதாதேவி தயாபரனின் மைத் துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18-11-96) காலை 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் எற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க. கோவிந்தராஜா
(கணவன்)

கண்டி வீதி,
சாவகச்சேரி.

(43687)

## திருமதி மருதப்பா அன்னலட்சுமி

உடையார் ஒழுங்கை, கொக்குவில் கிழக்கைச் சேர்ந்த திருமதி மருதப்பா - அன்னலட்சுமி காலமா னார்.

இவர் உடையார் ஒழுங்கை, கொக்குவில் கிழக் கைச் சேர்ந்த காலஞ்சென்ற பட்டடை சின்னத்தம்பி யின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற தங்கமலர், ஜெயமணி, கனக சபேசன் (சத்தி, கனடா) ஆகியோ ரின் அன்புத் தாயாரும், வைத்திலிங்கம் (ஓய்வு பெற்ற யாழ். மாநகரசபை ஓவசியர்), இராசரத்தினம் (வர்த் தகர், கொக்குவில்), குகேஸ்வரி (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும், சாந்திக்குமார் (சீமெந்துக் கூட்டுத் தாபனம், காங்கேசன்துறை), ராஜ்குமார் (லண்டன்), சுரேஸ்குமார் (கொழும்பு), லண்டனில் காலஞ்சென்ற பிரிதிவிராஜ், பிரிதினி, பொன் வினோத் (கனடா), தினேஸ் (கனடா), திவ்யா (கனடா), மனோகரி, ரவீந் திரன் (ரஞ்சன், ரான்ஸ்போர்ட் சேவிஸ் உரிமையா ளர்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், திலீப், இந்து ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (18 11-96) திங்கள் காலை 10 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக காரைக்கால் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இதனை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறேன்.

தகவல்;
வை. சாந்திக்குமார்
(பேரன்)

உடையார் ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

(43699)

---


# உடன் தேவை

ஆண்களுக்குரிய ஆடைகள் தைப்பதற்கும், வீட் டில் இயங்கும் பெண்களுக்குரிய ஆடைகள் தைக்கும் தையல் நிறுவனத்திற்கும் இருபாலாரும் தேவைப்படு கின்றனர். இதில் பழக ஆர்வமுள்ளவர்களும் தொடர்பு கொள்ளவும்.

முகவரி: சிற்றி ரெயிலர்ஸ்,
17, பெரிய கடை வீதி, யாழ்ப்பாணம்.

[43692]


---

# மரண அறிவித்தல்

## திருமதி வீரசிங்கம் (தம்பிராசா) மங்கையர்க்கரசி

நல்லூர் பருத்தித்துறை வீதியைச் சேர்ந்த வீரசிங் கம் மங்கையர்க்கரசி 17-11-96 ஞாயிற்றுக்கிழமை கால மானார்.

அன்னார் காலஞ்சென்ற முருகேசு வீரசிங்கத்தின் அன்பு மனைவியும், வசந்தமோகன் (ஜேர்மனி), சந் திரமோகன் (நியூவே றெக்கோடிங்பார், நல்லூர்), பத் மினி, பகிரதி (புத்தளம்) ஆகியோரின் தாயாரும், நந்தினி (ஜேர்மனி), ராஜேஸ்வரி (கோண்டாவில்), நவரத்தினம் (கொழும்பு), மைக்கல் (சூடான்) ஆகி யோரின் மாமியாரும், நிரோசினி, நிசுன், பிந்துஷா, பிறேமினி, சிந்துஷா, கிரிதரன், டினேஷன், சாளினி, திவாளினி, ரிசானா ஆகியோரின் பேர்த்தியும், காலஞ் சென்ற திருமதி யோகராசா [ஆசிரியை, பரியோவான் கல்லூரி], காலஞ்சென்ற பரஞ்சோதி அம்மா, காலஞ் சென்ற கனகாம்பிகை, கனகரத்தினம், மகேஸ்வரி [குஞ்சா — ஜேர்மனி]. இராசபூபதி ஆகியோரின் சகோ தரியும், இராசம்மாவின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியை விவரம் பின் அறிவிக் கப்படும் இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண் பர்கள் ஏற்றுக் கொள்ளும்படி வேண்டுகிறோம்.

தகவல்:
பத்மினி
[மகள்]

இல: 545, பருத்தித்துறை வீதி,
நல்லூர்.

(43693)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறிய ரோந்துப் படகுகளை பயன்படுத்த பின்நிற்பதால் கடற்படையினருக்கு இழப்பு!

## கடற் புலிகளின் முயற்சியை முறியடிக்க உரிய தந்திரம் தேவை

கடற்புலிகளின் தாக்குதல்களில் இருந்து, கடற்படையின் அதிவேகத் தாக்குதல் படகுகளையும், பீரங்கிக் கப்பல்களையும் எவ்வாறு பாதுகாப்பது?

இதற்காக அதிவேகத் தாக்குதல் படகுகளை சோடி சோடியாக கடல் நடமாட்டங்களில் ஈடுபடுத்த கடற்படையினர் முதலில் முயற்சிகளை மேற்கொண்டனர். ஆனால் போதுமானளவு அதிவேகத் தாக்குதல் படகுகள் கைவசம் இல்லாத காரணத்தால் இந்த முயற்சி கைகூடவில்லை.

புதிய அதிவேகத் தாக்குதல் படகுகளை அமெரிக்கா, இஸ்ரேல் ஆகிய நாடுகளிடமிருந்து பெறுவதற்கான கொள்வனவுக் கட்டளைகள் அனுப்பிவைக்கப்பட்டன. இருப்பினும் அவை மிகவும் மந்த கெதியிலேயே விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

கொழும்பிலுள்ள கப்பல் கட்டும் துறை அதிவேகத் தாக்குதல் படகுகளைக் கட்டக்கூடிய ஆற்றலைப் பல ஆண்டுகளுக்கு முன்னரே கொண்டிருந்த போதிலும்—பல ஆண்டுகளுக்குப் பின்னர் — அண்மையிலேயே அதிவேகத் தாக்குதல் படகுகளை அமைப்பதற்கான ஒப்பந்தம் கொழும்பு கப்பல் கட்டும் துறையுடன் கைச்சாத்திடப்பட்டுள்ளது. வேறு எந்தவொரு வெளிநாட்டையும் விட விரைவாக அதிவேகத் தாக்குதல் படகுகளை அமைத்து வழங்கக் கூடிய ஆற்றலை கொழும்பு கப்பல் கட்டும் துறை கொண்டுள்ளது.

போதுமான அளவு அதிவேகத் தாக்குதல் படகுகள் கைவசமில்லாததும், அவற்றைச் சோடி சோடிகளாக பாதுகாப்புப் பணிகளில் ஈடுபடுத்த முடியாத நிலையும் வடக்குக் கிழக்கு கரையோர கடல் ரோந்துப் பணியைப் பெரிய அளவில் பாதித்துள்ளது. இதனால் கடற்புலிகளுக்கு இப்பகுதிகளில் சுதந்திரமாக நடமாட வாய்ப்புக்கள் ஏற்பட்டுள்ளன.

### கடற்புலிகளின் தந்திரம்

கடற்புலிகள் முப்பது அல்லது நாற்பது படகுகளை ஒரே இடத்தில் திரளாக நிறுத்திவைத்து— ஒரு மாயத் தோற்றத்தை ஏற்படுத்தி— கடற்படையின் அதிவேகத் தாக்குதல் படகுகளைக் கவர்ந்திழுத்து — அவற்றை தமது வலையில் சிக்க வைக்கும் தந்திரத் திட்டத்தினை செயற்படுத்தி வருகின்றனர்.

இவ்வாறு கவரப்பட்ட அதிவேகத் தாக்குதல் படகுகள் குறித்த நிலையை நோக்கிச் செல்கையில் கடற் கரும்புலிகளிகளின் தற்கொலைப் படையினரால் அவை தாக்கி அழிக்கப்படுகின்றன. இவ்வாறான நிகழ்வுகள் முல்லைத்தீவுக் கரைக்கப்பால் அடுத்தடுத்து இடம் பெற்றதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

### மாற்று வழி

கடற்புலிகளால் பெரிய அளவில் கடற்படையினர் மீது மேற்கொள்ளப்படும் இவ்வாறான தாக்குதல்களுக்குப்பொருத்தமான மாற்று வழி என்னவென்றால்—

கடற்படையினரும் மூன்று அல்லது நான்கு பேர்களால் மட்டும் கையாளக்கூடிய சிறிய ரக படகுகளைப் பெருமளவில் கொண்டிருக்க வேண்டும். அப்போது தான் கடற்புலிகள் கையாளும் அதே தந்திரத்தைக் கொண்டு அவர்களைத் தோற்கடிக்க முடியும்.

இது புதியதோர் சிந்தனை அல்ல,

இப்பத்தியில் பல காலமாகத் திரும்பத்திரும்ப அதுபற்றி எடுத்துக் கூறப்பட்டுள்ளது. கடற்படை அதிகாரிகளில் பலரும் இதே அபிப்பிராயத்தைக் கொண்டுள்ளனர்.

கடற்படையினரால் இயலாமற்போன ஒருசந்தர்ப்பத்தில் இராணுவத்தினர் இம் முறையை அனுசரிக்க விரும்பினர்; டசின் கணக்கில் சிறிய படகுகளைக் கொள்வனவும் செய்தனர். ஆனால் அவை என்ன காரணத்தாலோ பயன்படுத்தப்படாமல் இன்று வரை பனாகொடை இராணுவ முகாமில்— கட்டாந்தரையில் — வைக்கப்பட்டுள்ளன.

> 'ஸ்ரீலங்காவின் கடற் தந்திரோபாயம் தவறானது?'' என்ற தலைப்பில் 'சண்டே ஐலண்ட்' ஆங்கில வார இதழில் அதன் பாதுகாப்புச் செய்தியாளர் வரைந்த கட்டுரையின் இறுதிப் பகுதி இங்கு பிரசுரமாகின்றது.

இந்த விவகாரத்தில் முக்கிய அம்சம் என்னவென்றால் 1991 — 1993 காலகட்டத்தில் கடற்படையினர் இந்த முறையைக் கையாண்டதுடன் அதன் மூலம் வியத்தகு வெற்றியையும் அடைந்துள்ளனர்.

நாகதேவன்துறை கடற்படைத் தளம் கடற்படையின் விசேட வேவுப் பிரிவு அணிக்காகவே அமைக்கப்பட்டது. இந்தமுகாம் நூற்றுக் கணக்கான இளநிலை அதிகாரிகளையும் கடற்படையினரையும் கொண்டிருந்தது. அவர்கள் கரைக்கு அண்டிய பகுதிகளில் ரோந்துப் படகுகளையும் டிங்கிகளையும் கையாண்டனர்.

இந்தச் சிறிய படையணியில் பணிபுரிந்த வீரர்கள் தங்கள் துணிச்சலை வெகு விரைவில் நிரூபித்தனர். கடமையுணர்வுடன் கூடிய அதிஉயர் பயிற்சியை அவர்கள் கொண்டிருந்ததுடன் யாழ் கடல் நீரேரியில் திகிலூட்டுபவர்களாகவும் விளங்கினர்.

நாகதேவன்துறையிலிருந்து செயற்பட்டுவந்த ஐந்து ரோந்துப் படகுகளும் விடுதலைப் புலிகளின் நூற்றுக்கணக்கான படகுத் தொடரணிகளை ஒவ்வொரு இரவும் தாக்கின. அச்சம் தரும் போரில் ஈடுபட்டு டசின் கணக்கில் கடற்புலி வள்ளங்களை அழித்துவிட்டு இந்த ரோந்துப் படகுகள் ஒவ்வொரு இரவும் தளம் திரும்பின.

இரு ஆண்டுகள் யாழ். கடல் நீரேரியில் இப்படகுகள் பணியில் ஈடுபட்டிருந்த போதிலும் கடற்புலிகளுடனான போரில் இரு ரோந்துப் படகுகள் மாத்திரமே அழிக்கப்பட்டன.

### புலிகளின் தந்திரம் வெற்றியளிக்கவில்லை

எதிரிப் படகுகளின் எண்ணிக்கையுடன் ஒப்பிடும் போது குறைந்த எண்ணிக்கையுடையதாக இருந்த போதிலும் —

இலகு ஆயுதங்கள் பொருத்தப்பட்ட சிறிய படகுகளைக் கொண்ட இந்த விசேட படகுப் படையணி, கடற்புலிகளின் அணிக்கு இணையானதாக விளங்கியது.

கடற்புலிப் படகுகளின் எண்ணிக்கையளவு படகுகள் இல்லாவிட்டாலும், களத்தில் ஒரே சமயத்தில் பல கடற்படைக் கலங்கள் திரளாகக் காணப்பட்டதால் —

ஒன்று அல்லது இரண்டு கடற்படைக் கப்பல்களை பல்வேறு முனைகளில் இருந்து தாக்கி அழிக்கும் கடற்புலிகளுக்குப் பிடித்தமான தந்திரம் வெற்றியளிக்காமல் போயிற்று.

இந்தச் சிறிய ரக கரையோர ரோந்துப் படகுகள் மீது தாக்குதல் நடத்தி கடற் கரும்புலிகளை வீணாக இழப்பதற்கு விடுதலைப் புலிகள் விரும்பவில்லை. நான்கு பேருக்குக் குறைந்த கடற்படையினரைக் கொண்டிருக்கும் இச்சிறிய கடற்படைப் படகுகள் கடற்புலிகளின் வேட்டைக்கு போதுமான இரையாக இருப்பதில்லை.

### சாதகமான ஆற்றல்

கரையோர கடல் ரோந்துப் படகுகள் சிறியவையாக இருப்பதாலும் அவை வேகமாக நகரும் திறன்மிக்கவையாக இருப்பாதாலும் தற்கொலைப் படையினர் வரும் படகுகளிலிருந்து வேகமாக

**பகுதி - 2**

வெட்டி விலத்தித் தப்பிச் செல்லும் சாதகமான ஆற்றலை அவை இயல்பாகக் கொண்டுள்ளன.

விசேட படகுப் படையணியின் இத்தகைய அச்சுறுத்தலான ஆற்றல் காரணமாக—

1993 நவம்பரில் பூநகரி மற்றும் நாகதேவன்துறை மீதான தாக்குதலில் தமது சுமார் ஆயிரம் உறுப்பினர்களை பலி கொடுக்கவும், மேலும் பல்லாயிரக்கணக்கான உறுப்பினர்களை காயங்களுக்கு உள்ளாக்கவும் வேண்டிய கட்டாய நிலைக்கு விடுதலைப் புலிகள் தள்ளப்பட்டனர்.

### துரதிர்ஷ்டவசமான முடிவு

இந்த யுத்தத்தின் பின்னர், விடுதலைப் புலிகளின் இத்தகைய தாக்குதலுக்கு தாக்குப்பிடிக்க முடியாது எனக் கருதி, நாகதேவன்துறை முகாமை மூடிவிடும்துரதிர்ஷ்டவசமான தீர்மானத்தை கடற்படை எடுத்தது.

ஆனால் சிறிய படகுகளைக் கொண்டு — அதிக செயலாற்றல் உத்திகளுடன் — இயங்கி வந்த விசேட படகுப் பிரிவுப் படையணியை கடற்படையினர் கைவிட்டதுதான் ஆச்சரியமானதாகும்.

நாகதேவன்துறை கடற்படைத் தளத்திலிருந்த விசேட படகுப் பிரிவு படையணியைச் சேர்ந்த ஒரு சிலர் உயிர் தப்பினர். புதிதாகச் சேர்க்கப்பட்டவர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. இருப்பினும் பயிற்சி பெற்ற அவர்கள், தங்களுக்கு உரிய விசேட பணிகளில் ஈடுபடுத்தப்படாது கடற்படைத் தளங்களைப் பாதுகாக்கும் பணிகளிலேயே ஈடுபடுத்தப்பட்டனர்.

குடாநாட்டில் இடம்பெற்ற — விடுதலைப் புலிகளுக்கு எதிரான — ஒரு சில நடவடிக்கைகளில் மாத்திரம் இந்த விசேட பயிற்சி பெற்ற கடற்படையினர் பயன்படுத்தப்பட்டனர்.

நால்வராக அல்லது ஐவராக [illegible] பெருந்தொகையான கடற்புலிகளின் படகுகளுடன் சண்டை செய்ய இந்த விசேட பயிற்சி பெற்ற கடற்படையினருக்கு அதற்குப் பின்னர் வாய்ப்புக்கள் இல்லாமற் போயின.

இதற்கு முக்கிய காரணம் நாகதேவன்துறைத் தளத் தாக்குதலின் பின்னர் ஒரு சில கரையோர கடல் ரோந்துப் படகுகள் மட்டுமே கொள்வனவு செய்யப்பட்டமையாகும்.

### கவர்ச்சி மிக்க பீரங்கிப் படகுகள் மீதே அதிகாரிகளுக்குக் கண்!

கடற்படை உயர் அதிகாரிகள் பெரிய — கவர்ச்சி மிக்க பீரங்கிப் படகுகளை வெளிநாடுகளில் இருந்து பெறுவதிலேயே நாட்டங்கொண்டனர். இவை ஒவ்வொன்றும் பலநூறு கோடி ரூபா பெறுமதியானவை. உள்நாட்டில் சிறிய படகுகளை அமைக்கக் கூடிய கப்பல் கட்டும் துறைகள் பல இருந்தும் — ஒரு சில இலட்ச ரூபாயில் அப்படகுகளைக் கட்டித்தர சம்பந்தப்பட்டோர் முன்வந்த போதும் கரையோரக் கடல் ரோந்துப் படகுகளை கடற்படை அதிகாரிகள் புறக்கணித்து விட்டனர்.

இந்த நிலையிலும் அளவில் பெரியதும் அதிக விலை கொண்டவையுமான சப்பல்களைச் சண்டையில் இழக்க கடற்படை விரும்பவில்லை.

கடந்த ஜூலை மாதத்தில் முல்லைத்தீவு முகாம் தாக்கப்பட்டபோது தரைப்படையினரைக் கொண்டுவந்து தரையிறக்குமாறு கடற்படையினருக்குக் கட்டளை பிறப்பிக்கப்பட்ட போதிலும் படையினரைத் தரையிறக்க அவர்களுக்கு நான்கு நாள்கள் எடுத்தன.

### சிறிய படகுகளின் சிறப்பான பணி

மாறாக, சுமார் இரண்டு வாரங்களுக்கு முன்னர் சீற்றங்கொண்ட எதிரியின் எதிர்ப்புக்களின் மத்தியில் வெற்றிலைக்கேணி கடற்புலிகளின் தளத்திற்கு அண்மையில் நூற்றுக்கு மேற்பட்ட கடற்படையினரை இச் சிறுபடகுகளே கொண்டு சென்று தரையிறக்கின. வேகம் குறைந்த — பாரிய — தரையிறக்கும் கலத்தினால் நிறைவேற்ற முடியாத பணியை இச்சிறிய படகுகள் சிறப்பாக நிறை வேற்றின. இந்த நடவடிக்கையின் போது ஒரே ஒரு கரையோர ரோந்துப்படகை மாத்திரமே கடற்படை இழந்தது.

செயற்திறன் மிக்க இந்தத் தந்திரோபாயத் திட்டம் கைவிடப்பட்டது துரதிஷ்டவசமானதாகும். இதனால் அண்மைக் காலத்தில் கடற்புலிகள் வளர்ச்சி பெற்றனர்.

விடுதலைப் புலிகள் செயற்திறன் மிக்க ஒரு உத்தியைக் கண்டறிந்து, அதையே தொடர்ந்தும் கையாண்டு வருகின்றனர். எதிர்த்தாக்குதலை மேற்கொள்ள கடற்படையினர் இந்த உத்தியையே முதலில் கையாண்டனர்.

ஆனால் தற்போது கடற்படையினர் இந்த உத்தியைக் கையாளுவதைக் கைவிட்ட நிலையில் சிறிய படகுகளைக் கொண்டு தாக்கும் புலிகளின் உத்தி வெற்றியளிக்கிறது.

இதன் பயனாக, பாரிய போர்க் கப்பல்களை டசின் கணக்கில் கடற்புலிகளின் படகுகள் அலைபோல வந்து சுற்றிவளைக்கும் போது அந்தப் போர்க்கப்பல்கள் பல சந்தர்ப்பங்களில் பெரும்பாலும் மூழ்கடிக்கப்படுகின்றன. பாரிய போர்க்கப்பல்களைப் பாதுகாக்க போதுமான அளவு சிறிய படகுகள் இல்லை. இந்த நிலைமை ஒன்றின் பின் ஒன்றாக போர் கப்பல்களை இழக்கும் நிலைமையையே உருவாக்கும்.

(முற்றும்)

---

## 45-ம் நாள் நினைவஞ்சலி



திருமதி

**விசாகப்பெருமாள் பத்மினி**

மலர்வு: 20-07-1970 | உதிர்வு: 05-10-1996

அன்பின் திருவுவாய், அணையாத ஒளிவளக்காய்,
குடும்பத்தின் குலவிளக்காய் இருந்த வேளைதனில்
பாதித் துயிலில் பறித்ததுவோ உன் உயிரை
அரவம் என்னும் பெயரில் காலன்
இன்னுயிர் ஈர்க்க வந்தான்.

இன்னுயிர் ஈர்ப்பால் தவிக்கும்:

உங்கள் அன்புக் கணவன்
க. விசாகப்பெருமாள்
மற்றும் குடும்பத்தினர்.

மறவன்புலோ,
சாவகச்சேரி.

(43682)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம்

# சின்னஞ்சிறு விளம்பரம்

*விற்பனைக்கு*

நல்ல நிலையிலுள்ள கேபிள் பிறேக் போட்ட இரண்டு பெண்கள் துவிச்சக்கர வண்டிகள் நீதியான— மலிவான விலையில் விற்பனைக்குண்டு. இல: 404 (64), மணிக்கூட்டு வீதி (புட்டு சந்தி), பெருமாள் கோவிலடி, யாழ்ப்பாணம். (43681)

*இடமாற்றம்*

யாழ்ப்பாணம், பிரதான வீதியில் இயங்கி வந்த சில்லாலை— Dr. அல்போன்சஸ் அத்தனாசியார் மருத்தெண்ணெய் களஞ்சியம், 70/2 பழைய பூங்கா வீதி, கொய்யாத்தோட்டத்திற்கு இடம் மாறியுள்ளதை அறியத்தருகிறோம். திருமதி கமலினி றஞ்சன். (43634)

*அககரைச் சீமையில்*

அராலியூர் ந. சுந்தரம் பிள்ளையின் நாடகங்கள் வானொலியில் கேளுங்கள். நூலை வாங்கி நாவலை வாசியுங்கள். துன்பம் சூழும் போது உங்களை மறந்து வேறு உலகில் சஞ்சரிக்கலாம். மலிவு விலை ரூபா 25/.. (43613)

*நூலாலயம்*

பெரியோர், இளைஞர், யுவதிகள், சிறுவர்களுக்கான பயன் தரும் புத்தகங்களை தெரிவு செய்து வாசிக்க, மகிழ லிங் லென்டிங் லைப்ரறி 41, தபாலக வீதி, சாவகச்சேரி. Ling Lending Library (43650)

## தொழிலாளர் பயிலரங்கு

யாழ்ப்பாணம், நவ. 18

யாழ். பல்கலைக்கழக தொழிலாளர் கல்வி அலகு, அரசு, அரசசார்பற்ற நிறுவனங்களின் உதவியுடன் தொழிலாளர் பயிலரங்குகளை நடத்தவிருக்கிறது.

பத்து தலைப்புக்களில் இடம்பெறவிருக்கும் இந்த பயிலரங்களில் பங்கு பற்ற விரும்பும் தொழிலாளர் மற்றும் ஆர்வமுடையோர் எதிர் வரும் 30 ஆம் திகதிக்கு முன் பல்கலைக்கழக தொழிலாளர் கல்வி அலகில் பதியுமாறு கேட்கப்பட்டுள்ளது. (உ-3)

## நியூட்டன்

82, ஸ்ரான்லி வீதி,
ஆரியகுளம் சந்தி.

கணக்கியல்
நிறைவில் பதிவுகள்
ஆரம்பம்:-
**19 - 11 - 1996**
பி. ப. 3 30–4.30
ஆசிரியர்:
சுதர்ஷன்
(43688)

## 31-ம் நாள் நினைவஞ்சலி



### அமரர் சின்னத்துரை சந்திரன்


கோண்டாவில் பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவு சங்கத்தின் நிர்வாக சபை உறுப்பினர் சின்னத்துரை சந்திரன் அவர்கள் 17-10-96 அன்று அகாலமரணமடைந்ததையிட்டு பணிப்பாளர்கள், பணியாளர்கள், அங்கத்தவர்கள் தங்களின் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றனர்.

பணிப்பாளர்கள், பணியாளர்கள்,
அங்கத்தவர்கள்.

கோண்டாவில் ப. தெ. வ. அ. கூ. சங்கம்
தாவடி.
(8980)

## 12-ம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 16 — 07 — 1938



மறைவு: 18 — 11 — 1984

அமரர்

### அ. க. சிவசுப்பிரமணியம் (சிவம்)

(உரிமையாளர் — அம்புலி போட்டோ, நல்லூர்)

திதி:- **5 — 12 — 1996**

பாரினிலே பலரும் போற்ற வாழ்ந்த அப்பா!
பல ஆண்டுகளாக எம்மை விட்டுப் பிரிந்தீர் அப்பா!
ஆண்டுகள் பன்னிரண்டு சென்றாலும் அப்பா!
எங்கள் மனதிலிருந்து நீங்கள் என்றென்றும்
பிரியவில்லை அப்பா!

உங்கள் பிரிவால் துயருறும்;
மனைவி, மாமி, மக்கள்,
மருமக்கள், பேர்த்தி.

''அம்புலி போட்டோ'',
410, கோயில் வீதி,
நல்லூர்.
(சி-3512)

## முதலாம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம்: 16 — 03 — 1924
மறைவு: 28 — 09 — 1995

தோற்றம்: 30 — 01 — 1908
மறைவு: 28 — 11 — 1995

அமரர்
**சோமசுந்தரக் குருக்கள் வடிவழகாம்பாள்**
(16 - 10 - 96 புதன்)

அமரர்
**செல்லையா ஐயர் சோமசுந்தரக் குருக்கள்**
(18 - 11 - 96 திங்கள்)

புரட்டாதி ஸ்ரீ பூர்வ சதுர்த்தி <— திதி —> கார்த்திகை ஸ்ரீ பூர்வ அட்டமி

உங்கள் ஆத்ம சாந்திக்காகச் சப்பச்சி மாவடி விநாயகனைப் பிரார்த்திக்கும்;
திரு - திருமதி செ. பரமானந்தக் குருக்கள்
(மகன், மருமகள்)

கல்வயல்,
சாவகச்சேரி.
(43579)

# வன்னிக்கு பொருள்கள் வருவதில் தடங்கல் நிலை

கொழும்பு, நவ. 18

வன்னி மாவட்டத்துக்கு போதிய உணவுப் பொருள்கள் வந்து சேர்வதில்லை என்று அங்குள்ள அரச அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

வன்னிப் பிராந்தியத்துக்கு மாதந்தாம் 1986 லொறி லோட் உணவுப் பொருள்கள் தேவையென அரச அதிகாரிகள் கூறியுள்ள போதும், அதிலும் குறைந்த அளவு பொருள்களே வந்து சேர்வதாகச் சுட்டிக் காட்டப்படுகிறது.

இந்த வருடம் மே மாதம் முதல் ஒக்ரோபர் மாதம் வரையான ஆறு மாத காலப் பகுதிக்கு 12 ஆயிரம் லொறி லோட் உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்கள் வந்திருக்க வேண்டும்.

ஆனால் 6197 லொறி லோட் உணவுப் பொருள்களே வந்துள்ளன என தெரிவிக்கப்பட்டது. (உ-3-150)

## அடையாள அட்டை கவரிடுதல்

ரூபா **20/-** முதல் **50/-** வரை

[பாடசாலை — காரியாலயங்களுக்கு விசேட கழிவு உண்டு]

**சன்லைட் றைக்கிளீனேர்ஸ்**
யாழ்ப்பாணம்.
(43648)

## வரலாறும் சமூகக்கல்வியும் OL

அதிசிறந்த பெறுபேற்றுக்கு
36 மணி நேர மீட்டற்பயிற்சிநூல்

i) 74 பயிற்சி வினாக்கள்
ii) 12 அட்டவணைகள்
iii) முக்கிய குறிப்புகள்

பரீட்சை தினத்திற்கு முந்திய நாள் ஒரே தொகுப்பாக மீட்கக்கூடியது.

விலை ரூபா **18/-** பூபாலசிங்கம் புத்தக சாலையில் பெறலாம். இருபாலை, கொக்குவில், மானிப்பாய், சுண்டுக்குளி புத்தகசாலைகளுக்கும் விநியோகிக்கப்படும்.

ஆக்கம்:
திரு. **A.** புவனேந்திரன் B A. Dip in. Ed.
(43689)

## நீங்காத நினைவினில் அந்தியேட்டி அழைப்பும் நினைவஞ்சலியும்



### திருமதி கற்பகம் சங்கரப்பிள்ளை

தோற்றம்: **27—01—1924**
மறைவு: **16—10—1996**

அளவற்ற அன்பு கொண்ட பண்பு நிறைந்த அன்னையின் நினைவுகள் ஓய்வதில்லை!

19-11-96 (செவ்வாய்க்கிழமை) எமது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டி, சபிண்டீகர கிரியைகளில் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் பங்குபற்றுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

ம. சங்கரப்பிள்ளை
(சைவசித்தாந்த பாதுகாவலர்,
பௌராணிகர்),
பிள்ளைகள், மருமக்கள்.

கோயிற்கடவை,
துன்னாலை மத்தி.
(43668)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### ஆலோசனை ஏற்கப்படுமா?

தபால், தொலைத் தொடர்புத்துறை பிரதி அமைச்சர் எம். எச். எம். ஹிஸ்புல்லா கடந்த வாரம் நாடாளுமன்றத்தில், வரவு — செலவுத் திட்ட விவாதத்தில், ஆற்றிய உரை அனேகமாக எல்லோரது கவனத்தையும் ஈர்த்திருக்கும்.

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா முன்வைத்துள்ள பிரதான நிபந்தனை ஒவ்வாதது என்பதனை அவர் தெளிவாக எடுத்துரைத்திருக்கிறார்.

போரில் ஈடுபட்டுள்ள இரு சாரார்களில் ஒரு தரப்பு தான் ஆயுதத்தை ஏந்திக் கொண்டு - நீட்டிப் பிடித்துக் கொண்டு - அடுத்த தரப்பினை ஆயுதத்தைக் கீழே வைக்க வேண்டும் என்று கேட்பது தர்க்க ரீதியாகக் கூடப் பொருந்தாத ஒன்றாகும்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் விடயத்தில் விடுதலைப் புலிகளை ஓரங்கட்ட நினைத்து, அவர்களுடன் பேசுவதற்கு உண்மையிலேயே விரும்பாமல், அவர்கள் ஏற்றுக் கொள்ள முடியாத ஓர் அர்த்தமற்ற நிபந்தனையை முன்வைத்து பேச்சுவார்த்தையைத் தவிர்ப்பதற்கான ஓர் உபாயமாகவும் இது அமையலாம்.

விடுதலைப் புலிகள் ஆயுதங்களைக் கீழே வைக்க வேண்டும் என்ற ஜனாதிபதியின் நிபந்தனையின் பலவீனத்தை உணர்ந்து தானோ என்னவோ பிரதி அமைச்சர் ஹிஸ்புல்லா ஒரு மாற்று வழியை, நடைமுறைச் சாத்தியமான முறையை ஆலோசனையாகத் தெரிவித்துள்ளார்.

ஆயுதங்களின் மௌனம் (Arms Silence) என்ற அடிப்படையில் பேச்சுக்களை ஆரம்பிப்பது குறித்து ஜனாதிபதி சிந்திக்க வேண்டும் என்பதே பிரதி அமைச்சரின் ஆலோசனையாகும்.

உலக நாடுகள் பலவற்றில், போர் நடைபெறும் நாடுகளில் ஆயுதங்களை மௌனமாக்கி — அவற்றை வெடித்துச் சத்தம் போடாதிருக்கத் தவிர்த்து — சமாதானப் பேச்சுக்கள் நடைபெற்றதையும் பிரதி அமைச்சர் ஹிஸ்புல்லா சுட்டிக்காட்டியிருக்கிறார்:

போரில் ஈடுபட்டுள்ள தரப்புகள் மக்கள் நலன் கருதியும், சமாதானப் பேச்சுக்களை மேற்கொள்ளும் பொருட்டும் கைக்கொள்ளும் நடைமுறைகள் பலவுள்ளன. போர் நிறுத்தம், இருதரப்புகளும் ஆயுதங்களைக் கீழே வைத்தல், பகைமை நிறுத்தம், ஆயுதங்களை மௌனமடையச்செய்தல் என்பனவும் அவற்றில் வழக்கமானவை.

போர் நிறுத்தம் ஒன்றைக் கொண்டு வந்து விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சு நடத்துவதற்கு அரசு விரும்பவில்லை. அந்த இடைவெளியைப் பயன்படுத்தி விடுதலைப் புலிகள் தமது ஆளணி ஆயுத பலங்களைப் பெருக்கிவிடுவார்கள் என்று அஞ்சுகிறது.

ஆனால் இராணுவத் தீர்வில் வைத்துள்ள நம்பிக்கையை அரசும் கைவிட்டதாகச் சொல்வதற்கில்லை. அரசின் செயற்பாடுகள் அதனையே வெளிப்படுத்துகின்றன.

பிரதி அமைச்சர் ஹிஸ்புல்லாவின் ஆலோசனையை ஜனாதிபதி ஏற்கவில்லையெனில், கவனத்தில் எடுக்கவில்லையெனில் பேச்சுவார்த்தையில் அவருக்கு அக்கறை இல்லை என்பது நிரூபணமாகும்!

# திருமலை, வெலிஓயாவில் புலிகள் செயற்பாடு தீவிரம்!

## மாவீரர் வாரத் தாக்குதலுக்கு முற்னேற்பாடா?

கொழும்பு, நவ. 18

வெலிஓயா (மணலாறு) மற்றும் திருகோணமலைப் பகுதிகளில் புலிகளின் செயற்பாடு தீவிரம் அடைந்திருப்பதாகவும் —

எதிர்வரும் வியாழக்கிழமை ஆரம்பமாகும் மாவீரர் வாரத்தின்போது இப்பிரதேசங்களில் பெரும் தாக்குதலை புலிகள் நடத்தக்கூடும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் —

கொழும்பு ஆங்கிலப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன.

புலிகளின் முக்கிய தளபதிகளில் ஒருவரான சொர்ணம் தலைமையில் சுமார் ஆயிரம் புலிகள் இயக்கப் போராளிகள் கடந்த வாரம் வெலிஓயாப் பகுதிகளுக்குள் ஊடுருவியுள்ளனர் என ஒரு பத்திரிகை தெரிவித்தது.

திருகோணமலைத் தென் பகுதிக்கும் வாகரை வடக்குப் பகுதிக்கும் இடையில் கடற்கரையில் இருந்து சில நூறு யார் தொலைவில் புலிகள் தலைமைத்துவம் சுறுசுறுப்பாக இயங்கியதாக மற்றொரு பத்திரிகை தெரிவித்தது.

கடற்புலிகளின் தளபதி சூசை தலைமையில் கடற்புலிகளின் அணி வகுப்பு ஒன்றை தலைமைப் பீடத்தினர் பார்த்தனர். அப்பகுதியிலிருந்து வானொலித் தகவல் பரிமாற்றங்கள் தீவிரமாக இருந்தன.

திருமலையில் எங்கேயோ ஓரிடத்தில் தாக்குதல் ஒன்றை நடத்துவதற்கான ஆயத்தங்களை கடற்புலிகள் மேற்கொள்ளக்கூடிய அறிகுறிகள் தென்பட்டன. நவம்பர் 26 ஆம் திகதியோடு ஒட்டித் தான் இது நடக்குமா?— என்று கேட்கப்படுகிறது— இவ்வாறு அப்பத்திரிகை மேலும் குறிப்பிட்டது.

(உ-150)

## பயணிகள் கப்பல் இன்று

காங்கேசன்துறையில் இருந்து திருகோணமலைக்கு 575 பயணிகளுடன் இன்று கப்பல்கள் புறப்படவிருப்பதாகவும்—

இக்கப்பல்களில் பயணம் செய்ய வசதியாகப் பட்டியல் இல. 107க்கு உட்பட்டவர்கள் இன்று காலை 7மணிக்கு சென். ஜோன்ஸ் கல்லூரியில் சமுகமளிக்குமாறு கோரப்பட்டுள்ளது.

(உ-3)

## சிமெந்து ஊழியர் கொடுப்பனவு

காங்கேசன் சிமெந்துத் தொழிற்சாலை ஊழியர்களின் இரண்டு மாதங்களுக்குரிய (செப்டெம்பர், ஒக்ரோபர்) கொடுப்பனவுகள் மட்டுமே வர்த்தக வங்கியில் வைத்து இன்று காலை வழங்கப்படும்.

நவம்பர் மாதக் கொடுப்பனவும் வழங்கப்படும் என்று முன்னர் அறிவித்தது தவறு என்று நிர்வாகத்தினர் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

# வவுனியாவில் அகதிகள் தங்க கொட்டில்கள்

## பாடசாலைகள் திறக்கப்படும்

கொழும்பு, நவ. 18

டிசம்பர் மாதம் முதலாம் திகதியளவில் வவுனியா பாடசாலைகள் அனைத்தையும் மீண்டும் திறக்கும் நோக்கத்தோடு அகதிகளுக்காக அந்த மாவட்டத்தில் ஓரளவிலான நிரந்தரக் கொட்டில்களை அமைக்கும் திட்டம் ஒன்றை அரசாங்கம் ஆரம்பித்துள்ளது.

ஒவ்வொரு கொட்டிலும் 100x20 அடி விஸ்திரணத்தை கொண்டதாக இருக்கும் என்றும் —

இத்தகைய 100 கொட்டில்கள் தேவைப்படும் எனவும் — மதிப்பிடப்பட்டிருக்கிறது.

இவற்றில் 32 கொட்டில்கள் ஏற்கனவே அமைக்கப்பட்டு வருகின்றன.

வன்னியில் இருந்து வரும் அகதிகளைத் தங்க வைக்க தற்பொழுது வவுனியாவில் உள்ள பாடசாலைகள் பயன்படுத்தப்படுவது தெரிந்ததே.

பாடசாலைகள் மூடப்பட்டிருப்பதால் மாணவர்களின் கல்வி பாதிக்கப்படுவதாக பெற்றோர் எதிர்ப்புத் தெரிவித்து வருவதை அடுத்தே அகதிகளுக்காக கொட்டில்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

(இ-4)

# அடுத்த ஆண்டுக்குரிய பாடசாலைத் தினங்கள்

அடுத்த வருடம் சகலபாடசாலைகளும் ஆகக்குறைந்தது 210 நாள்கள் இயங்க வேண்டும் என்று கல்வியமைச்சு சகல பாடசாலை அதிபர்களுக்கும் அறிவுறுத்தல் விடுத்துள்ளது.

மகாசிவராத்திரி தினமான மார்ச் மாதம் 7 ஆம் திகதி இந்துக்களுக்கும், ஹஜ் விடுமுறை தினங்களான ஏப்ரல் 18 ஆம், 21 ஆம் திகதிகள் முஸ்லிம்களுக்கும் விடுமுறை நாள் என்றும் கல்வியமைச்சு அறிவித்துள்ளது.

அடுத்த வருட பாடசாலைத் தவணை விவரம் வருமாறு:-

★ முதலாம் தவணை— 01-01-97 முதல் - 11-04-97 வரை.

★ இரண்டாம் தவணை— 23-04-97 முதல் - 01-08-97 வரை.

★ மூன்றாம் தவணை— 27-08-97 முதல் - 12-12-67 வரை.

(உ-3-10)

# டென்மார்க்கிலிருந்து வந்த சித்திரா இப்போது எங்கே?

கொழும்பு, நவ. 18

கடந்த சில தினங்களாகப் பெரும் பரபரப்பை உண்டாக்கிய கோப்பாயைப் பிறப்பிடமாகக் கொண்ட சித்திரா ராஜேந்திரன் இப்போது எங்கே?

அவர் இலங்கை அரசினால் டென்மார்க்குக்குத் திருப்பி அனுப்பப்பட்டு விட்டாரா? அல்லது இலங்கையில் தான் உள்ளாரா?

இது குறித்து முரணானதும் தெளிவற்றதுமான தகவல்கள் வெளிவந்து கொண்டிருக்கின்றன.

டென்மார்க்கில் இருந்து நாடு கடத்தப்பட்டு இலங்கை வந்து சேர்ந்த பின்னர் கைது செய்யப்பட்ட 18 வயதான சித்திரா மீண்டும் டென்மார்க்குக்கு அனுப்பப்பட்டிருப்பதாக லேக்ஹவுஸ் பத்திரிகைகள் சனியன்று செய்தி வெளியிட்டிருந்தன. ''லங்கா புவத்'' செய்தி ஏஜென்சியை மேற்கோள்காட்டி அப்பத்திரிகைகள் இந்தச் செய்தியை வெளியிட்டன.

ஆனால், நீதிமன்றத் தீர்ப்பின் பிரகாரம் சித்திரா இராணுவ சேனைமுகாமிலிருப்பதாகப் பாதுகாப்பு அமைச்சு மறுப்புத் தெரிவித்தது. லேக்ஹவுஸ் பத்திரிகைகளில்வெளியான செய்தி முற்றிலும் பிழையானதென பாதுகாப்பு அமைச்சு அறிவித்தது.

இதே வேளை, தமது சகோதரர்கள் இருவர் விடுதலைப் புலிகள் இயக்கத்தில் உறுப்பினர்களாக இருப்பதாக சித்திரா தமது வாக்குமூலத்தில் தெரிவித்தார் என்றும் சொல்லப்படுகிறது.

(அ-இ-ரி)

### நாளை

கார்த்திகை 4

செவ்வாய்க்கிழமை

திதி: நவமி

பிற்பகல் 5.17வரை.

நட்சத்திரம்: சதயம்

பிற்பகல் 3.00 வரை.

ராகுகாலம்: 3.09-4.39

சுபநேரம்: 10.39 - 12.09

(பகலுக்கும் இரவுக்கும் பொதுவான நேரப்படி)

# பிரேமதாஸாவின் மகனின் செயற்பாடு குறித்து சீற்றம்

## கட்சிக்குள் பெரும் அதிருப்தி

கொழும்பு, நவ. 18

முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின் இறுதிக்கிரியைகள் நடந்த தினமன்று — ஐக்கிய தேசிய கட்சி அறிவித்தபடி — துக்கம் கொண்டாடாமல் முன்னாள் ஜனாதிபதி பிரேமதாஸாவின் மகன் சஜித் கரப்பந்தாட்டப் போட்டியிலும், விருந்துபசாரத்திலும் கலந்து கொண்டார் என தெரியவந்துள்ளது.

ஐ தே.கட்சி சகல தொகுதிகளிலும் ஜே.ஆர். ஜெயவர்த்தனாவின் மறைவுக்கு துக்கம் அனுஷ்டிக்குமாறு அந்தந்தத் தொகுதி அமைப்பாளர்களுக்கு பணிப்புரை விடுத்திருந்தது.

ஆனால் முன்னாள் ஜனாதிபதி பிரேமதாஸாவின் மகனான சஜித்துக்கு ஒதுக்கப்பட்ட - தென்மாகாணத்தில் உள்ள தொகுதியில் - அவர் துக்கம் கொண்டாட வேண்டிய ஏற்பாடுகள் எதுவும் செய்யாது கரப்பந்தாட்டப் போட்டி ஒன்றில் பங்குபற்றினாராம்.

அத்துடன் அப்போட்டி முடிந்தபின் நடந்த விருந்துபசாரத்திலும் அவர் பங்குபற்றினார்.

இந்த விவகாரம் ஐ தே.கட்சியினருக்கு பெரும் எரிச்சலை ஏற்படுத்தியுள்ளதாம். அவர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டிய நேரம் இது என்று கட்சியின் முக்கிய புள்ளிகள் தீர்மானித்துள்ளனர் என்று கொழும்பு பத்திரிகைச் செய்திகள் தெரிவிக்கின்றன.

(உ-150-2)

## பொருள்கள் இறக்குவது பாதிப்பு

வடமராட்சி, நவ. 18

கடற்கொந்தளிப்புக் காரணமாக பருத்தித்துறை துறைமுகத்தில் கப்பலிலிருந்து பொருள்கள் இறக்கும்பணி மந்தமாக நடைபெற்றுவருகிறது.

தற்போது பொருள்களை இறக்கிக் கொண்டிருக்கும் 'வாதுவ' கப்பலிலிருந்து பொருள்களை இறக்கி முடிக்க இன்னும் இருவாரங்கள் பிடிக்கும் என நம்பப்படுகிறது.

## வாசகர் திருமுகம்

### வீதியின் பாதிக்கா திருத்தம்?

கடந்த சில மாதங்களுக்கு முன் அரசு திருத்த வேலைகளுக்கென அறிவித்த 20 வீதிகளில் இருபாலை - கோண்டாவில் வீதியும் இடம்பெறுகின்றது. அதன் பிரகாரம் வீதி திருத்த வேலைகளுக்கென கற்களும் கொண்டு வந்து குவிக்கப்பட்டுள்ளன. இருபாலை - கோண்டாவில் வீதி மேற்கே கோண்டாவில் சந்தியில் தொடங்கிக் கிழக்கே இருபாலை தரிசு நிலத்துடன் முடிவடைகிறது. ஆனால் இவ் வீதியில் திருத்த வேலைகளுக்கென உட்பட்ட பகுதி இருபாலைச் சந்தியுடன் நின்று விட்டது.

இருபாலைச் சந்தியில் இருந்து கிழக்கு நோக்கிச் செல்லும் இருபாலை வீதி, பத்துப் பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னர் இருபாலை - யாழ்ப்பாணம் பேருந்து ஓடுமளவிற்கு முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது பின் பேருந்து சேவை நிறுத்தப்பட்டதன் பின் அது தன் முக்கியத்துவத்தை ஒப்பீட்டளவில் குறைத்துக் கொண்டது எனலாம்.

ஆனாலும் இன்று இவ்வீதி இருபாலைப்பகுதி மக்களுக்கும், கோப்பாய் தெற்கில் வாழும் ஒரு பகுதி மக்களுக்கும் வெளியூருடன் தொடர்பினை ஏற்படுத்தும் ஒரே ஒரு பாதையாக உள்ளதைச் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நன்கறிவர். அத்தோடு இவ்வீதி நீண்டகாலம் திருத்த வேலைகளுக்கு உட்படாமல் கற்கள் மிதத்தும், குன்றும் குழியுமாகக் காட்சி தருகின்றது. கோடையில் கடும் புழுதியும் கற்களும் மாரியில் வெள்ளமும் சேறுமாக உள்ளமையை இவ் வீதியால் செல்லும் உள்ளூரவர்களும், இருபாலைக்கு வரும் வெளியூர்க்காரர்களும் கண்டிருப்பர்; அனுபவித்திருப்பர். இன்று இவ்வீதியால் செல்லும் எமது தேசிய வாகனமாகிய சைக்கிள் வண்டிக்கு நாளுக்கு ஒரு ஒட்டு வருவது வழமையாகி விட்டது.

ஆகையால் இவ்வீதியால் நாளும் பயணம் செய்யும் பல நூற்றுக் கணக்கானோரின் நலன் கருதி, இருபாலை - கோண்டாவில் வீதி என்பதன் முழுமைப் பதத்தையும் உணர்ந்து இப்பகுதி மக்களின் மனவேதனையை ஓரளவேனும் குறைப்பதற்கு சம்பந்தப்பட்ட நிர்வாகப் பிரிவு அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பார்களா?

அ. நெல்லிநாதலிங்கம்

கோப்பாய் தெற்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகளுடன் அரசாங்கம் பேச்சு நடத்த வேண்டும்!

## றொனி டி மெல் வற்புறுத்து

கொழும்பு, நவ. 18

''ஐரிஷ்விடுதலை முன்னணி போன்ற கிளர்ச்சிக்குழுக்களுடன் ஆயுதங்களைக் கைவிட வேண்டுமெனக் கோராமலேயே சம்பந்தப்பட்ட நாட்டு அரசாங்கம் பேச்சுவார்த்தை நடத்துகிறது. எனவே இலங்கை அரசும் இது போன்று விடுதலைப் புலிகளுடன் எந்த வகையிலாவது அணுகி பேச்சு நடத்தி யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வர வேண்டும்.''

— முன்னாள் நிதியமைச்சரும், மாத்தறை மாவட்ட எம்.பியுமான றொனிடி.மெல் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இப்படிக் கூறினார். அவர் அங்கு மேலும் கூறியதாவது:-

மூன்று மாத காலத்தில் போரை முடிப்போம் என அரசு கூறியது. வருடங்கள் இரண்டும் கடந்து விட்டன. இந்த முடிவில்லாப் போருக்கு முடிவு காண முடிந்ததா?

யுத்தத்துக்கு முடிவு காண வேண்டுமானால் அரசு உடனடியாக தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களையும், நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்காத தமிழ்க் குழுக்களையும் அழைத்துப் பேச்சு நடத்த வேண்டும் — என்றார்.

# வவுனியாவில் மோதல்?

மணிலா, நத. 18

வவுனியா பூவரசம் குளத்தில் அமைந்திருந்த பதினைந்துக்கும் மேலான இராணுவ காவலரண்களை நேற்று முன்தினம் அதிகாலை விடுதலைப் புலிகள் தாக்கி அழித்து தமது கட்டுப்பாட்டில் கொண்டுவந்தனர் என்றுசெய்தி ஏஜென்ஸி ஒன்று தெரிவித்தது.

நான்கு இராணுவத்தினரும் நான்கு போராளிகளும் இத்தாக்குதலில் இறந்ததாகத் தெரிகிறது என்றும் —

பெருமளவு ஆயுதங்கள் மற்றும் இராணுவத்தினரின் தளபாடங்கள் விடுதலைப்புலிகளால் கைப்பற்றப்பட்டன என்றும் —

அந்தச் செய்தி நிறுவனம் மேலும் குறிப்பிட்டது. [உ-3]

# இலங்கைப் பிரச்சினையில் தலையிட இந்தியப் பிரதமரிடம் வற்புறுத்தல்

## ஜனார்த்தனன் நேரில் சந்தித்து மகஜர்

'இலங்கை விடயத்தில் இந்தியா தலையிட்டு இலங்கைத் தமிழரைக் காப்பாற்ற வேண்டும், இந்தியாவின் அறிவுரையை ஏற்று தமிழர்களுடன் பேச்சு நடத்த இலங்கை அரசு முன்வரா விட்டால் இந்தியா இந்த இனப்பிரச்சினையை ஐ.நா. சபைக்கு எடுத்துச் சென்று இலங்கைத் தமிழரைக் காக்கவேண்டும்.'

—இவ்வாறு கோரும் மகஜர் ஒன்றை இந்தியப் பிரதமர் தேவகௌடாவிடம் உலகத் தமிழர் பேரவைத் தலைவர் டாக்டர் இரா. ஜனார்த்தனன் கையளித்தார்.

கடந்த வாரம் பிரதமர் தேவகௌடா சென்னை வந்த போது ஜனார்த்தனன் மாலை அணிவித்து வரவேற்ற பின் இந்த மகஜரைக் கையளித்தார்.

இலங்கைத் தமிழரின் துன்பம் இன்று உச்சக்கட்டத்தைத் அடைந்து விட்டது. இலங்கைத் தமிழர்கள் அகதிகளாகி உயிர் காக்க மருந்தில்லாமல், உணவில்லாமல், மாற்று உடை இல்லாமல் படும் அவதியை உலக மனிதாபிமான அமைப்பு விளக்கி உள்ளது. கிருஷாந்தி என்ற மாணவி கற்பழித்து கொலை செய்யப்பட்டுள்ளார். மகளைத் தேடிப் போன தாயும், சகோதரனும், பக்கத்து வீட்டுக்காரரும் படுகொலை செய்யப் பட்டுள்ளனர்.

வெளிநாட்டில் வாழும் இலங்கைத் தமிழர் இந்தியாவில் வாழும் ஒரு லட்சம் இலங்கை அகதிகளைக் காண விஸா கிடைப்பது இல்லை. பிரதமர் தேவகௌடா வெளிநாட்டு இந்திய தூதரகங்களுக்கு அறிவித்து விஸா வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும்—இவ்வாறு அந்த மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-150-3)

# மலையகத்திலும் கிளர்ச்சி வரும்!

## இ. தொ. கா. பிரமுகர் எச்சரிக்கை

கொழும்பு, நவ. 18

''மலையகத்தில் வேலையில்லாப் பிரச்சினை உட்பட பல்வேறு நெருக்கடிகள் தோன்றியுள்ளன. அவற்றுக்கு தீர்வு காணாவிடின் அங்கும் கிளர்ச்சி ஒன்று தோன்றலாம்.''

—இப்படி எச்சரித்துள்ளார் கொழும்பு மாவட்ட இ.தொ.கா. நாடாளுமன்ற உறுப்பினர் ஆர். யோகராஜன்.

நாடாளுமன்றத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இந்த எச்சரிக்கையை விடுத்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

1970 ஆம் ஆண்டுக்குப் பின்னர் பெருந்தோட்டத்துறை அபிவிருத்தி செய்யப்படவில்லை. வேலை வாய்ப்பின்மை பெருகியுள்ளது.

சனத்தொகைப் பெருக்கத்துக்கமைய தொழில் வாய்ப்பின்மையால் தோட்டப் பகுதியை விட்டு இளைஞர்கள் வேறு பகுதிகளுக்கு இடம் பெயர்ந்தனர்.

ஆனால் அண்மைக் காலமாக வெளியிடங்களிலும் பொலிஸார் மற்றும் படையினரின் தொல்லைகள் அதிகரித்திருப்பதால் அந்த இளைஞர்கள் வேறுவழியின்றி திரும்பவும் தோட்டப் பகுதிக்கு சென்று தொழில் வாய்ப்பு இன்றி தமது இருப்பிடங்களிலேயே கைதிகளாக இருக்க வேண்டிய நிலையில் உள்ளனர்.

அவர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணாவிடில் வடக்கு - கிழக்குப் பகுதி போன்று — தெற்கில் இடம் பெற்றவை போன்று — மலையகத்திலும் கிளர்ச்சியை எதிர்கொள்ள வேண்டி நேரிடும்— என்றார். (உ-3)

## உயர்பதவி நியமனத்தில் இழுபறி:

# பிரதி பொலீஸ் அதிபர்கள் வழக்குத் தாக்கல் செய்வர்?

கனிஷ்ட தரத்தில் உள்ள பிரதி பொலீஸ்மா அதிபர் ஒருவருக்கு உயர்பதவி ஒன்று வழங்கப்படவிருப்பதை ஆட்சேபித்து பிரதி பொலீஸ்மா அதிபர்கள் (டி. ஐ. ஜிக்கள்) குழு ஒன்று உயர்நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்யப் போகின்றது என கொழும்பில் பேச்சடிபடுகின்றது.

தற்போது 37 பிரதிப் பொலீஸ்மா அதிபர்கள் சேவையில் உள்ளனர்.

அவர்களில் சுமார் இருபது பேரை முந்திக் கொண்டு — கனிஷ்ட தரத்தில் உள்ள அதிகாரி ஒருவருக்கு — உயர் பதவி வழங்க முடிவெடுக்கப் பட்டிருக்கின்றதாம்.

சேவை மூப்பை நிராகரித்து மேற்கொள்ளப்படவிருக்கும் இந்த நியமனத்தை ஆட்சேபித்தே உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்ய ஆலோசனைகள் நடக்கின்றன. (உ-150)

தமிழ் - ஆங்கில தட்டச்சு மற்றும்
றோணியோ வேலைகளுக்கு
அருண்
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

மரண அறிவித்தல் 2 ஆம் பக்கத்தில்

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேசன் (பிறைவேற் லிமிடெட்டினரால்) யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 18-11-1996 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# கட்டாய இராணுவ சேவை குறித்து ஆராய வெளிநாட்டுக்கு விசேட குழு

கொழும்பு, நவ. 18

14 வயதுக்கு மேற்பட்ட இளைஞர்களை கட்டாயஇராணுவ சேவைக்கு அழைக்கும் விவகாரம் குறித்து ஆராய வெளிநாட்டுக்கு குழு ஒன்று செல்ல விருப்பதாக அறியவருகின்றது — 'சண்டே ரைம்ஸ்' ஆங்கில வார இதழ் நேற்று இவ்வாறு செய்தி வெளியிட்டுள்ளது.

கட்டாய இராணுவ சேவை எவ்வாறு வெளிநாடுகளில் மேற்கொள்ளப்படுகிறது என்பது குறித்து இக்குழு அங்கு ஆராயும் என்றும் தெரிவிக்கப் பட்டது.

இராணுவ, கடற்படை, விமானப்படை ஆகியவற்றுக்கு ஆள்களைச் சேர்ப்பதற்காக நேர்முகப் பரீட்சைகள் நடத்தப்பட்ட போதும், போதிய ஆள்கள்சேராத காரணத்தால், கட்டாய இராணுவ சேவைத் திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டிய நிலைக்கு அரசு தள்ளப் பட்டுள்ளது என்றும் 'சண்டே ரைம்ஸ்' தெரிவித்தது. (உ-3)

## கொழும்பு—

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வெளியே நடமாடுவதைக் குறைக்குமாறும் —

அனைத்து முகாம் படையினரும் எதற்கும் ஆயத்தமான உஷார் நிலையில் இருக்க வேண்டும் எனவும் —

இராணுவ உயர் பீடம் ஒவ்வொரு முகாம் பொறுப்பதிகாரிக்கும் உத்தரவிட்டுள்ளதாகச் சொல்லப்படுகிறது.

— இப்படி அந்தச் செய்தி நிறுவனம் மேலும் குறிப்பிட்டது. [உ-3]

## டக்ளஸுக்கு—

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

செய்தி மேலும் தெரிவித்தது.

புனர்வாழ்வு, புனரமைப்பு, அமைச்சை வழங்க அரசாங்கம் முன்வந்ததாகவும் —

அதை ஏற்பதால் முஸ்லிம் காங்கிரஸுக்கும் தமக்கும் இடையில் முரண்பாடு ஏற்படலாம் என டக்ளஸ் தெரிவித்துள்ளதாகவும் —

— 'சண்டேரைம்ஸ்' மேலும் தெரிவித்துள்ளது. (உ-3)

## வெலிக்கடச்.

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

யப்பட்ட ஒருவருக்கு உணவு சமைத்துக் கொடுத்தனர் என்ற சந்தேகத்தின் பேரில் தாயும் மகளும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

மேல் மாகாண சபை முதலமைச்சரின் அலுவலகக் குண்டுத் தாக்குதலில் சம்பந்தப் பட்டவர் எனக் கூறப்படுபவரின் நெருங்கிய உறவினரான பெண்மணி ஒருவரும் இங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ளார். [உ-3]

# நகரங்களே படைகளிடம்; கிராமங்கள் புலிகள் வசமே!

## எதிர்க்கட்சித் தலைவர் கூறுகிறார்

கொழும்பு, நவ. 18

''இன்று நாட்டில் எழுந்துள்ள பொருளாதார நெருக்கடிக்கு யுத்தத்தைக் காரணம் காட்ட முடியாது.

''நகரங்கள் இரண்டை மட்டுமே படையினர் புதிதாகக் கைப்பற்றினார்கள். ஆனால் வடக்கு - கிழக்கு கிராமப் புறங்கள் யாவற்றிலும் விடுதலைப் புலிகளே நிர்வாகத்தை நடத்தி வருகிறார்கள்.''

— இவ்வாறு கூறியுள்ளார் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க.

நாடாளுமன்றத்தில் வரவு-செலவுத் திட்ட விவாதத்தில் கலந்து கொண்டு பேசுகையிலேயே அவர் இப்படிக் கூறினார். அங்கு அவர் மேலும் கூறியதாவது:-

''நாடு பெரும் பொருளாதாரச் சிக்கலை எதிர்நோக்க வேண்டியுள்ளது. கைத்தொழில் துறைகள் ஸ்தம்பிதம் அடைந்துள்ளன. ஒரு வேளை மட்டுமே உணவு கிடைக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. இவற்றை விவாதிப்பதற்கென உடனடியாக நேரம் ஒதுக்குவது அவசியமாகும்.

''பணவீக்கம் அதிகரித்து வருகிறது; வேலை வாய்ப்பு இல்லை, தெற்காசியாவிலேயே பொருளாதாரத்தில் பின்தங்கிய நாடாக எமது நாடு மாறிவருகிறது.''—என்றார். (உ-3)

## உதவும்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கைக்கு உதவும் நாடுகள் குழுவின் இந்த வருடத்துக்கான கூட்டம் இன்று பாரிஸில் ஆரம்பமாகிறது. அந்த மாநாட்டில் கலந்து கொள்வதற்குப் பயணமாவதற்கு முன்னர் கருத்துத் தெரிவிக்கையிலேயே பேராசிரியர் பீரிஸ் மேற்கண்டவாறு கூறினார்.

உதவி நிதி குறித்து இலக்கு தொகை ஒன்றை மனதில் வைத்துக்கொண்டு இந்தக் கூட்டத்துக்குத் தாம் செல்லவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

எனினும் நியாயமான ஒரு தொகை கிடைக்கும் என எதிர்பார்ப்பதாக அமைச்சர் பீரிஸ் கூறியதாக ஏ. எவ். பி செய்தி ஸ்தாபனம் குறிப்பிட்டது.

இதேவேளை, பாரிஸில் இன்று ஆரம்பமாகும் கூட்டத்தில், வடக்கு - கிழக்கு யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்து, நாட்டில் அரசியல் ஸ்திரத்தன்மையை உருவாக்குமாறு வற்புறுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அபிவிருத்திக்கான நிதி உதவியாக 3,500 கோடி ரூபா முதல் 4,000 கோடி ரூபா வரை இலங்கை அரசு எதிர்பார்ப்பதாக கொழும்பில் அதிகாரிகள் தெரிவித்தனர். (அ-3)

# பிரேமா கொலை வழக்கு

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாஸா படுகொலை தொடர்பான வழக்கு விசாரணை அடுத்த மாதம் 19 ஆம் திகதி ஆரம்பமாகவிருக்கிறது.

இவரின் கொலைக்கு உடந்தையாக இருந்ததாக துன்னாலையைச் சேர்ந்த விஜயம் விமலேந்திரன் குற்றம் சாட்டப்பட்டுள்ளார். (உ-3)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org